Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17

Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 20 மார்ச் 2015 கானம் : 8






Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar


ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை




வேணு : 20 | மார்ச் 2015 | கானம் : 8



Delivered by India Post www.indiapost.gov.in



பிப்ரவரி 11 திருவண்ணாமலை ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில் மாதேவகி பாடசாலையில் புதிய கட்டிடம் திறப்பு





பிப்ரவரி 8 சோளிங்கரில் நகர கீர்த்தனம் - அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



பிப்ரவரி 14 திருத்தணி பலிஜாவாடி திருமண மண்டபத்தில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை

மாலை கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான்
பிரதிஷ்டா தின வைபவம்



பிப்ரவரி 17 மஹாசிவராத்திரி



காலையில் விட்டலாபுரம்
ஸ்ரீபாண்டுரங்கன் கோவிலில்



மதுரபுரி ஆஸ்ரம வளாக
கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான்
சன்னதி - பொங்கல் திருநாள்
மஹாரண்யம், மலைப்பட்டு
கிராம சிறார்களுக்கு
பள்ளி சீருடை வழங்குதல்



ஜனவரி 29
பெங்களூரு
மல்லேஸ்வரம்
ஆஸ்திக
சமாஜத்தில்
பூர்ணிமாஜி
சத்சங்கம்

பிப்ரவரி 15
மதுரபுரி ஆஸ்ரமம்
மலைப்பட்டு
மஹாரண்ய
கிராம மாணவ
மணிகளுக்கு
மஹாமந்திர கூட்டு
ப்ரார்த்தனை,
திரு.பம்மல்
பாலாஜி மற்றும்
முரளிஜி









பிப்ரவரி 20 -26 ஸ்ரீசைதன்ய சரித்திரம் - பெங்களூர் கல்கரே கிராம
ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் வளாக சீதாராம ஹாலில்



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 மார்ச் 2015 கானம்: 8

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-228 | 03 | துயர்வரின் அழைமின் | 22 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| பாகவத பழம்- ஸ்க 2/22 | 09 | பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| கோபாலனுக்கு ஒரு மடல் | 14 | ப்ருந்தாவன கண்ணன் | 31 |
| மஹான்களின் வசனம் | 16 | மாலே மணிவண்ணா | 34 |

அருளால் எவையும்பார் என்றான் - அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி! .....

அறிவாலே உன்னை அடைய முயன்றேன். எல்லாம் இருளாக தெரிந்தது; பார்ப்பவனான என்னையும் தெரியாமலிருந்தேன். என் குருநாதன், "திருவருளால் பார்" என, அதை கேட்டபின், இருள் நீங்கி, "அருள் அனுபவம்" ஆயிற்று. என் அறிவு என்பது, அறியாமை அன்றோ தோழி!

- தாயுமானவர் (ஆனந்தக்களிப்பு)

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: கரஹரப்ப்ரியா

நாமம் சொல்லுவோம் வாரீர் - சதா ஹரி
நாமம் சொல்லுவோம் வாரீர்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

நாமம் சொல்ல சொல்ல பாவம் பறந்திடும்
நாமம் சொல்ல சொல்ல புண்யம் சேர்ந்திடும் (ஹரே ..)

நாமம் சொல்ல சொல்ல துன்பம் விலகிடும்
நாமம் சொல்ல சொல்ல இன்பம் பெருகிடும் (ஹரே ..)

நாமம் சொல்ல சொல்ல கவலை கலைந்திடும்
நாமம் சொல்ல சொல்ல அமைதி நிலைத்திடும் (ஹரே ..)

நாமம் சொல்ல சொல்ல வாசனை அழிந்திடும்
நாமம் சொல்ல சொல்ல பிறவிகள் குறைந்திடும் (ஹரே ..)

நாமம் சொல்ல சொல்ல மனது ஒருமுகமாகும்
நாமம் சொல்ல சொல்ல அறிவு கூர்மையாகும் (ஹரே ..)

நாமம் சொல்ல சொல்ல ஆபத்துகள் அகன்றிடும்
நாமம் சொல்ல சொல்ல விபத்துகள் விலகிடும் (ஹரே ..)

நாமம் சொல்ல சொல்ல பக்தி விரக்தி வளர்ந்திடும்
நாமம் சொல்ல சொல்ல ஞானம் உதித்திடும் (ஹரே ..)

முன் அட்டை: பிப்ரவரி 20-26 பெங்களூரு கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாக சீதாராம ஹாலில் சைதன்ய மஹாப்ரபு சரித்திர உபன்யாசம்

பின் அட்டை: பிப்ரவரி 20 ஆம்பூர் அருகே ஊட்டல் கிராமத்தில் சத்சங்கம்



# மதுரமான மஹனீயர் – 228

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

உலக வாழ்க்கை என்பது இன்ப, துன்பங்கள் நிறைந்தது. எவரும் இன்பத்திலோ அல்லது துன்பத்திலோ மட்டும் தொடர்ந்து இருந்ததாக இல்லை. வாழ்வில் துன்பங்கள் வருகையில், பலவித பிராயச்சித்தங்களை அனைவரும் செய்கின்றனர். கோவில் குளம் செல்வது, தீர்த்த யாத்திரை, பரிஹார ஹோமங்கள், இன்னும் என்னென்னவோ பல முயற்சிகளை பணத்தையும் உழைப்பையும் போட்டு செய்கின்றனர். இதை எல்லாம் விட சுலபமான ஒரு வழி இருக்கின்றது என நம் குருநாதர் சொல்வார்கள். அது என்ன? நாமனைவரும் இறைவனின் குழந்தைகள்தானே? தந்தையிடம் தனக்கு வேண்டியதை கேட்டு பெற குழந்தைக்கு, குழந்தை என்ற ஒரு தகுதி போதுமே! அவனிடமே கேட்கலாமே! கருணை மயமான அவனிடம் பிரார்த்தனை செய்தால், செவிசாய்க்க மாட்டானா என்ன? பிரார்த்தனை என்பதையே மறந்து விடுகிறோமே! உருகி கதறி, பிரார்த்தனை செய்தால் எத்தகைய கஷ்டங்களையும் அவன் போக்கிவிடுவான் என்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அடிக்கடி வலியுறுத்துவது வழக்கம்.

இறைவன் மகிழ்ந்தால், அவன் குழந்தைகளான நமக்கு அருளை அள்ளி தருவான். ஆனால் அவனை மகிழ்விப்பது எப்படி? அதற்குத்தான் அவனுடைய நாமம் என்பது இருக்கிறது. நாமம் சொன்னால் இறைவன் மகிழ்வான்; அதற்கு பொருளும் செலவில்லை. வேறு எந்த தேவையும் இல்லை; நாமம் மட்டுமே போதும்; அதனால் தர முடியாதது என்று எதுவுமே இல்லை. நாமா சொல்லி கதறி அழைத்தால் தாங்கவும் மாட்டான் என்றல்லவா குருநாதர் சொல்லி இருக்கிறார்கள்!

ஒரு விஷயத்தின் தீர்விற்கு பல வழிகள் இருக்கலாம். ஆனால் நாமாவை சொல்லி தீர்வு பெறுவதில், ஒரு கூடுதல் சிறப்பு இருக்கிறது. உலகியல் பிரார்த்தனைக்காக ஒருவர் நாமாவை சொன்னாலும் கூட, அது அவரை பகவானின் திருவடியில் சேர்த்து மறுபடி "கருவில் வராது காத்திடும்"

என்று குருநாதர் சொல்வார்கள். அகாமோ வா, ஸர்வ காமோ வா, மோக்ஷ காமோ வா என பாகவதம் சொல்கிறது. அதாவது ஆசையே இல்லை எனினும், உலகத்தில் ஆசை எனினும் அல்லது முக்தியில் ஆசை எனினும், பகவன் நாமம் தரும் என்கிறது. எண்ணற்ற மஹான்களின் சரித்ரங்களும் இதை சொல்கின்றன.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை: பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. குருநாதரும் எண்ணற்ற மஹான்களும் சொல்லும் இந்த நாமகீர்த்தனம் எனும் எளிய வழியோ, அருள், பொருள் இரண்டையும் ஒருங்கே தரவல்லதாக இருக்கிறது.

திரு.ராமகிருஷ்ணன் தஞ்சையை சேர்ந்தவர். அங்கு ஒரு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தவர். அவரது குடும்பம் எளிய நல்ல குடும்பம். அவரது மனைவி, ஒரு கோவிலில் பொறுப்பாளராக வேலை பார்த்து வருகிறார். 25வருடங்கள் நன்கு வேலை பார்த்து முடித்து, ராமகிருஷ்ணன் 2009இல் ஓய்வு பெற்றிருந்தார். எல்லோரும் தங்களால் முடிந்த அளவு சேமித்து, அதை பின்னாளில் அமைதியாக காலம் கழிக்க உபயோகப்படுத்தி கொள்ள நினைப்பார்கள் அல்லவா? கோடீஸ்வரராக வேண்டும் என்ற பேராசை இல்லை; ஆனால் மானத்துடன் யாரையும் எதிர்பார்க்காமல் வாழ வேண்டும் என்பதற்கு பொருள் அவசியமானதாயிற்றே? அப்படித்தான் ராமகிருஷ்ணனும் தான் சிறுக சிறுக சேர்த்த, பள்ளி ஓய்வூதிய நிலுவை தொகையை எதிர்பார்த்து இருந்தார். ஆனால் அரசாணைப்படி அவருக்கு கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல் போய்விட்டது. அது அவருக்கு மிக பெரிய அதிர்ச்சியை தந்தது. மனம் மிகுந்த வேதனை உற்றது. அவர் பல உபாயங்களை செய்து பார்த்தார். வழக்கு தொடர்ந்தார். அவருக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் சாதகமான தீர்ப்பு கிடைத்தும், அவருக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவை தொகை கிடைத்தபாடில்லை. திக்கற்றவருக்கு தெய்வம்தானே துணை? மனதில் வேதனையுடன், அவர் தஞ்சை ஸ்டேட் பாங்க் காலனியில் உள்ள பிள்ளையார் கோவிலிற்கு வந்தார். அங்குதான், அவருக்கு முதன் முதலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம் கிடைத்தது.

ஸ்ரீஸ்வாமிஜி, இந்த ஸ்டேட் பாங்க் காலனி பிள்ளையார் கோயிலில்தான், தஞ்சாவூரில் முதலில் மஹாமந்திரம் சொல்லி, பிரார்த்தனை செய்வதை துவக்கினார்கள். அங்கு பல சத்சங்கங்களை ஸ்ரீஸ்வாமிஜி நிகழ்த்தி இருக்கிறார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பக்தர்கள் பலரும் அங்கு ஒன்று கூடி பல கோவில்கள், வீடுகள், பொது இடங்களில் பலரின் நன்மைக்காக நாமத்தை ஒலிக்க செய்து வருகின்றனர். ஜனவரி **1, 2011**இல் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தஞ்சை தமிழரசி திருமண மண்டபத்தில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையையும் நிகழ்த்தினார்கள்.

இந்த பிள்ளையார் கோவிலுக்கு வந்த ராமகிருஷ்ணன், ஸ்ரீஸ்வாமிஜியை தரிசித்து, அவரது உபதேசங்களை கேட்டதில் இருந்து, ஸ்ரீஸ்வாமிஜியின்பால், மிகவும் ஈர்க்கப்பட்டார். அவரது குடும்பம் முழுக்கவும் அடிக்கடி குருநாதரை தரிசித்து ஆனந்தம் பெற்று வரலாயினர். அவருக்கு மனதில் நல்ல தெளிவு பிறந்தது. நாமம் சொன்னால் போதும்: வேறு எதுவும் தேவையில்லை என குருநாதர் அழுத்தம் திருத்தமாக சொல்லி வந்ததை கேட்ட ராமகிருஷ்ணனுக்கு, தாமும் அதையே செய்தால் என்ன என தோன்றியது.

அவரிடம் குருநாதரின் திருவுருவப்படம் ஒன்றும் இருந்தது. ஒரு காகிதத்தை எடுத்தார். அதில், "தனக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதிய தொகை கிடைக்க வேண்டும். அதற்கு அருள வேண்டும்" என எழுதி பிரார்த்தித்து விண்ணப்பித்துக் கொண்டார். அதை அந்த படத்தின் அடியில் வைத்துவிட்டு, தினமும் முப்பது நிமிடங்களுக்கு குறையாமல் மஹாமந்திர கீர்த்தனம் செய்து வந்தார். நாமம்தான் மண்ணுலக ஆசைகளையும் விண்ணுலக ஆசைகளையும் கணப்பொழுதில் நல்கிடும் தன்மை வாய்ந்தது என குருநாதர் சொல்லி இருக்கிறாரே? நாமம் சொன்னால் மாற்றம் தேடி வருமே!


ஜனவரி **1, 2015** அன்று மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை, சென்னை அம்பத்தூர் விவேகானந்தா பள்ளியில் ஸ்ரீஸ்வாமிஜி தலைமையில் நடைபெற்றது. இதற்கு **Prayer is Soul Healing** எனும் தலைப்பை **theme** ஆக ஸ்ரீஸ்வாமிஜி கொடுத்திருந்தார்கள். அன்று பல்லாயிரக்கணக்கான அன்பர்கள்

கூடி இருந்தார்கள். அந்த பள்ளி இருக்கும் இடம் மிகவும் பிஸியான இடம். ஒரே சத்தமும் இரைச்சலாகவும் இருக்கும். ஆனால் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், தம் அருளுரையை முடித்து, ஏராளமானோருடன் நாமகீர்த்தனம் செய்து, பிரார்த்தனை செய்வோம் என சொன்ன மறுகணம், ஓரிரு நிமிடங்கள் சுத்தமான நிசப்தம் **pindrop silence** நிலவியது. அப்பொழுது குருநாதர், "இங்கு எல்லோரும் கூடி இருப்பதை பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களுக்கு என்னை பார்த்து பேசி உங்கள் குறைகளை சொல்ல ஆசை இருக்கும். ஆனால் இங்கு நாமெல்லோரும் கூடி நாமம் சொல்லி உள்ளோம். பகவான், நாமம் சொல்லுமிடத்திற்கு, வருவது சர்வ நிச்சயம். கருணை வடிவான அவன் நாமாவிற்காக மகிழ்ந்து, அனைத்தையும் கொடுப்பான். கண்ணை மூடி அவனை நினையுங்கள். இங்கு உங்களுடன் அவன் நிச்சயம் இருக்கிறான் என நம்புங்கள். நம்பிக்கையுடன் நாமம் சொல்லி பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் கேட்பது நிச்சயம் நடக்கும்" என அருளினார். அந்த பிரார்த்தனை கூட்டத்தில் ஒருவராக ராமகிருஷ்ணனும் இருந்தார். ஸ்ரீஸ்வாமிஜியை அருகில் சென்று தரிசிக்க முடியாது போயினும், புத்தாண்டு பரிசாக தமக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவை தொகை கிடைக்க வேண்டும் என நாமம் சொல்லி, நம்பிக்கையுடன் பிரார்த்தித்தார்.

பகவானும் குருநாதரும் மகிழ்ந்தால் எதுதான் கிடைக்காது? இது நடந்து எட்டே நாட்கள்தான் ஆகி இருக்கும். அவருக்கு கிடைக்க வேண்டிய அந்த கணிசமான நிலுவை தொகை கிடைக்க ஆணை பிறந்து, அந்த தொகை கைகளில் கிடைத்தும் விட்டது. ராமகிருஷ்ணன் மகிழ்ந்து போனார். அவருக்கு அந்த தொகை மிக அவசியமானது. அதை வைத்துத்தான், அவர் தமக்கு தேவையானவற்றை செய்து கொள்ள வேண்டும்.

ஆனால், தொகை கிடைத்தது என்பது மட்டும் பெரிதல்ல. பிரார்த்தனை செய்தால், பகவான் அருளுவான் என அவருக்கு தெரிந்து போனது. நாமத்தின் வலிமை என்ன என்பதற்கு அவருக்கு ப்ரமாணம் இப்பொழுது வேறு எதுவும் தேவை இல்லை. அவருக்கே அது இப்பொழுது தெரியும்.

இப்படி நாமம் அவரை ஆட்கொண்டது!



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி:** ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் மூன்றும் மிக முக்யமானவைகள் என்று சொல்லப்படுவதன் காரணம் என்ன?

**பதில்:** ராமாயணம், ஒரு சமூகம் எப்படி இருக்க வேண்டும், அதாவது ஒரு **Ideal Society**யை காண்பிக்கின்றது. மஹாபாரதம், உண்மையில் ஒரு **Society** எப்படி இருக்கும், அதாவது ஒரு **practical society**யை காண்பிக்கின்றது.

ஸ்ரீமத் பாகவதமோ, இந்த சமூகத்தில் வாழ்ந்தும், அதில் ஒட்டாமல் பகவத் பக்தி செய்யும் பாகவதர்களை, அதாவது **Bhagawatha's society**யை காண்பிக்கின்றது.

**கேள்வி:** ஸ்ரீமத் பாகவதம், அடிக்கடி, சங்கம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. அதே சமயத்தில், சத்சங்கம் வேண்டும் என்றும் கூறுகின்றது. இது முரண்பாடாக இல்லையா?


**பதில்:** பகவத்குணத்தை, சொல்லியோ கேட்டோ, ஒருவருடனோ அல்லது பலருடனோ, அனுபவிக்க வேண்டும். இது, பகவத் பக்தியின் லக்ஷணங்களில் முக்கியமானதாகும்.

அப்படி கூடும்பொழுது, தற்பெருமை, தனக்கு முக்கியத்துவம், புகழ், வருமானம், அல்லது ஏதாவது ஒரு விதத்தில் பிரயோஜனம் போன்றவை தலை தூக்காமல் இருக்குமானால், அதுவும் சங்கம் இல்லாததற்கு சமம்தான். இவைகளில், ஏதாவது ஒன்று தலைதூக்குமானால், அது சங்கம்தான்.

**கேள்வி:** சிலரை, ஜீவ கோடி என்றும் சிலரை ஈஸ்வர கோடி என்றும் பக்தி நூல்களில் காணப்படுவதின் விளக்கம் என்ன?

**பதில்:** நாரத மஹரிஷிதான் பக்தியின் தந்தை. துருவன், வியாசர், வால்மீகி, பிரஹலாதன் போன்ற மஹாபாகவதோத்தமர்களுக்கே குரு அவர்தான். ஆனால்

அவரும் முந்திய பிறவியில் வீட்டு வேலைகள் செய்த ஒரு ஏழை தாயின் வயிற்றில் பிறந்து, மஹான்களின் சங்கத்தை அடைந்து இத்தகைய நிலையை அடைந்தார் என்று பார்க்கின்றோம்.



அதுபோல், வால்மீகி மஹரிஷி. அவர் இல்லையென்றால் ராமாயணமே இல்லை. அவரும் திருடனாக இருந்து, வழிப்பறி செய்து வாழ்ந்து வந்தார். நாரதர் உபதேசத்தினால் மாறி, ரிஷியாக ஆனார் என்பதை படிக்கின்றோம்.

விஸ்வாமித்திரர்தான் காயத்ரி மந்திரத்தை நமக்கு அருளிய மஹரிஷி. அவரும் ராஜாவாக இருந்தபொழுது, வசிஷ்டருடன் காமதேனு விஷயமாக சண்டையில் ஈடுபட்டார் என்பதை பார்க்கின்றோம்.

இப்படியாக அநேக சரித்திரங்கள். இவர்கள் ஒருகாலத்தில் ஜீவனாக இருந்து, ஈஸ்வரத்தன்மைக்கு உயர்ந்தவர்கள். ஆனால், பகவான் ஜீவனாக இருந்து, பகவானாக ஆனான் என்று, எங்கும் நாம் படிக்கவில்லை. மாறாக, ஈஸ்வரத்தன்மையே இயல்பாக உடைய பகவான், அவதாரத்தில் ஜீவனின்தன்மையை எடுத்து கொள்வதுதான் சிறப்பு. அதுதான் பகவானின் கருணை.

ஜீவன் ஈஸ்வரத்தன்மை அடைந்தால், அவர்கள் எல்லோரும் ஜீவகோடிகள்தாம். ஈஸ்வரன் எப்பொழுதும் ஈஸ்வரகோடிகள்தாம். உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், அர்ஜூனன், வால்மீகி, நாரதர் போன்றவர்களுடைய அம்சமாக உலகத்தில் யாராவது அவதாரம் செய்தால் அவர்கள் ஜீவகோடிகள் ஆவார்கள். சிவன், கிருஷ்ணன், ராமன் போன்றவர்களுடைய அம்சமாக யாராவது அவதாரம் செய்தால், அவர்கள் ஈஸ்வர கோடிகள் ஆவார்கள்.



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 7

–ஸ்ரீ ஸ்வாமிஜி (22)



பிரம்மா நாரதரிடம் அவதாரங்களைப் பற்றி கூறுவது: வராஹ, யக்ஞ, கபில, தத்தாத்ரேய, சனகாதிகள், நர நாராயண, ப்ருது, ரிஷப, ஹயக்ரீவ, மத்ஸ்ய, கூர்ம, நரசிம்ம, ஹரி, வாமன, ஹம்ச, மன்வந்த்ரங்களில் தோன்றிய அவதாரங்கள், தன்வந்தரி, பரசுராம, ராமாவதாரங்களின் தோற்றம், கார்யம், குணம் இவைகளைச் சுருக்கமாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார். (சென்ற இதழ் தொடர்ச்சி... மேலும் ..)

21) ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் : துஷ்ட அரசர்களால் பீடிக்கப்பட்ட பூமியின் கஷ்டத்தைப் போக்க, பகவான் தனது அம்சமான பலராமனுடன் அவதாரம் செய்து, மனிதர்களால் புரிந்து கொள்ளவே முடியாத வழிகளைக் கொண்டு, தனது மாஹாத்மியத்தை விளக்குகின்ற கார்யங்களை செய்யப் போகின்றார். குழந்தையாய் பூதனையின் உயிரை எடுத்ததும், வண்டியைக் காலால் உதைத்து உடைத்ததும், வானுயர நிற்கும் மருத மரங்களை அவற்றின் நடுவில் சென்று வீழ்த்தியதும், ஈஸ்வரன் அல்லாதவராயில் பொருந்தாது. விஷஜலத்தைப் பருகி உயிரிழந்த அனைவருக்கும் கடாக்ஷத்தால் உயிரளித்ததும், அந்த ஜலத்தை விஷமில்லாமல் செய்ய, அந்த விஷ பாம்பை விரட்டப் போகிறார் என்பதும், ஈஸ்வரன் அல்லாதவராயில் பொருந்தாது. காடு தீப்பற்றி எரியும் சமயம் அனைவரையும் கண் மூட செய்து பலராமனோடு கூடியவராய், அவர்கள் எல்லோரையும் வேறோரிடம் கொண்டு போக போகிறார் என்பதும், திவ்யமானதே. தாய் யசோதை எவ்வளவு கயிற்றை எடுத்தாலும், இந்தப் பிள்ளையை கட்ட போதுமானதாகயில்லை என்பதும், கொட்டாவி விடும் அவனது வாயில் முழு பிரபஞ்சத்தையும் பார்த்தது என்பதும் அலௌகிகமே. வருணனுடைய பாசத்திலிருந்து நந்தனையும், அசுரனால் குகைகளில் அடைக்கப்பட்ட கோபர்களையும்

விடுவிக்கப் போகின்றார். கோகுல ஜனங்களை வைகுண்டம் கொண்டு போகப் போவதும் ஆச்சர்யம். கோபர்களால் செய்யப்படுகின்ற இந்திர யாகம் நிறுத்தப்பட்டபோது, கோகுலத்தை அழிக்க இந்திரன் பெரும் மழை பொழிய, அப்பொழுது தயையால் ஏழு வயது பாலகரான பகவான், ஏழு நாட்களுக்கு, கோவர்தனத்தை, சோர்வே அடையாமல், ஒரு நாய்குடையை பிடிப்பது போல் தரிக்கபோகின்றார்! ஆச்சர்யம்! முழு நிலவின் ஒளியில் தனது மதுரமான முரளிகானத்தால் கோபிகைகளின் ஹ்ருதயத்தில் மன்மத தாபத்தை வளர்த்து அவர்களை ராஸக்ரீடையில் அபஹரித்து, பகவான் சங்கசூடனுடைய தலையை வெட்டப் போகிறார். மேலும் கம்ஸனிலிருந்து தொடங்கி, எல்லா துஷ்ட அரசர்களும் அரக்கர்களும், ஸ்ரீஹரியால் சம்ஹரிக்கப்பட்டு, வைகுண்டத்திற்குப் போக போகிறார்கள்.

22) வியாசாவதாரம் : 'வரப்போகும் யுகங்களில் மனிதர்கள் மந்த புத்தியும் அல்பாயுசும் உடையவர்கள். அவர்கள் வேதத்தை எப்படி அறிய முடியும்? கஷ்டம்' என்று சிந்தனை செய்து, அந்த பகவானே சத்யவதியினிடத்தில் தோன்றி, வேதமெனும் வ்ருக்ஷத்தை கிளைகளாக விபாகம் செய்யப் போகிறார்.

23) புத்தாவதாரம் : வேதப் பற்று உடையவர்களும், அதே சமயம் ஜனங்களையும் ஹிம்சித்துக் கொல்கின்ற அசுரர்களுக்கு புத்தி பிரமையை உண்டு பண்ண, பாஷாண்ட வேஷத்தை ஸ்வீகரித்து பாஷாண்ட தர்மத்தை பேசப் போகிறார்.

24) கல்கி அவதாரம் : எப்பொழுது கோவில்களிலும் கூட ஹரியின் கதைகள் இல்லாமல் போகுமோ, வர்ண சங்க்ரமங்கள் ஏற்படுமோ, எப்பொழுது மிலேச்சர்கள் அரசாட்சி புரிவார்களோ, எப்பொழுது 'ஸ்வாஹா, ஸ்வதா', வஷட்' எனும் (யாகங்களில் கூறப்படும் வேத) சப்தங்கள் இல்லாமல் போகுமோ, அப்பொழுது இந்த யுகத்தின் முடிவில் பகவான் கல்கியாக அவதரித்து கலியை நிக்ரஹம் செய்யப் போகின்றார்.

சிருஷ்டி காலத்தில் தவம், நான், ரிஷிகள், மற்றும் ஒன்பது பிரஜாபதிகளும், ஸ்திதி காலத்தில் தர்மம், யக்ஞம், மனுக்கள், தேவர்கள் மற்றும் அரசர்களும், பிரளய காலத்தில் அதர்மம்,

ருத்ரன், சர்பங்கள், அசுரர்களும் இவை அனைத்தும் அவரது மஹா விபூதிகளே! பூமியில் உள்ள புழுதிகளைக் கூட எண்ணிவிட்ட ஒரு புத்திசாலியாலும் கூட, விஷ்ணுவின் வீர்யங்களை கணக்கிட முடியுமா? தனது பாதங்களின் வேகத்தால், திரிவிக்ரமாவதாரத்தில் ஸத்யலோகம் வரையிலுள்ள உலகத்தை நிலைநிறுத்தினார் அன்றோ? பரம புருஷனுடைய மாயையின் பலத்தின் முடிவை நான் அறியேன்! நாரத! உனக்கு முன் ஜனித்தவர்களும், முனிவர்களும் கூட அறிவதில்லை. ஆயிரம் முகமுடைய ஆதிசேஷனும் இந்த பகவானின் புகழைப் பாடி இன்றும் கூட முதிர்வே அடையவில்லை. அப்படியிருக்கையில், வேறு எவர்தான் அவற்றை அறிய முடியும்?

*யேஷாம் ஸ ஏவ பகவான் தயயேதனந்த:*

*ஸர்வாத்மநா(ஆ)ச்ரிதபதோ யதி நிர்வ்யலீகம்*

*தே துஸ்தராமதிதரந்தி ச தேவமாயாம்*

*நைஷாம் மமாஹமிதி தீ: ச்வச்ருகாலபக்ஷ்யே 2.7.42*

எல்லை இல்லாத அந்த பகவானே எவர்களுக்கு தயை புரிகிறாரோ, கபடமில்லாத எல்லாவிதத்திலும் பகவத் சரணங்களை ஆச்ரயிப்பவர்கள், தாண்டவே முடியாத தேவ மாயையைத் தாண்டுகிறார்கள். அப்படி அனுக்ரஹிக்கப்பட்டவர்களுக்கு, நாய்க்கும் நரிக்கும் தின்பண்டமான இந்த சரீரத்தில் "நான், எனது" என்ற எண்ணம் உண்டாவதே இல்லை. அப்பனே! அவனது அருளாலேயே அந்த பரமாத்மாவினுடைய யோகமாயையை நான் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். அவ்விதமே பரமேச்வரனும் அறிவார். ஸ்வாயம்புமனுவும் அவரது மனைவியான சதரூபையும் அறிவார்கள். அவர்களுடைய குழந்தைகளும் அறிவர். பிராசீனபர்ஹிசும், ருபுவும், அங்கனும், துருவனும், இக்ஷ்வாகுவும், ஐலனும், முசுகுந்தனும், ஜனகனும், காதியும், ரகுவும், அம்பரீஷனும், சகரரும், கயனும், நாஹுஷனும் அறிவர். மாந்தாதா, அலர்கன், சததனு, அனு, ரந்திதேவன், பீஷ்மன், பலி, அமூர்த்தரயன், திலீபன், சௌபரி, உதங்கர், சிபி, தேவலர், பிப்பலாதர், ஸார்ஸ்வதர், உத்தவர், பராசரர், பூரிஷேனர் இவர்களும் மேலும் விபீஷணர், ஹனுமான், சுகர், அர்ஜுனன்,

விதுரன், ச்ருததேவன் முதலான சிரேஷ்டர்களும் யோகமாயையை அறிவார்கள்.

ஸ்திரீகள், இதரர்கள், ஹூனர்கள், சபரர்கள் போன்றவர்களும் பசு பக்ஷிகள் கூட, ஸ்ரீஹரியின் பக்தர்களின் சீலத்தை பழக்கத்தில் கொள்வதால், தேவமாயையை அறிகிறார்கள். அதைத் தாண்டவும் செய்கிறார்கள். பின் வேதங்களில் கூறப்பட்டுள்ளவைகளைப் பழகி வருபவர்கள் தேவமாயையைத் தாண்டுவார்கள் என்பதில் ஐயம் ஏதும் உண்டோ! எப்பொழுதும் மிகவும் சாந்தமாக இருப்பதும், ஆனால், அதனால் எப்பொழுதும் சுகரூபமானதும், ஞானஸ்வரூபமானதும், இரண்டாவது இல்லாததும், அதனாலேயே பயமில்லாததும், அதனால் சோகக் கலப்பே இல்லாததும், நிர்மலமானதும், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதும், ஜீவனுடைய ஸ்வரூபம் ஆகவும் இருக்கும், இந்த உண்மைப் பொருளை முனிவர்கள் பிரம்மம் என்று அறிகின்றனர். அதுவே, அந்த ஸர்வக்ஞரான பரமபுருஷனுடைய ஸ்வரூபம். வேதங்களும் இதை நேராக கூற முடியாமல், அது இல்லாததை மட்டும் நிராகரித்து, மீதி உள்ளதை பிரம்மமாக அறிவாய் என்று மட்டுமே சொல்கின்றன. அவ்விடத்தில் எந்த கிரியையும் இல்லை. மாயையானது, இவர் முன் நிற்க வெட்கப்பட்டு வெகுதூரத்தில் சென்றுவிடுகின்றது. யதிகளும், இவரிடமே மனதை ஸ்திரமாக நிலைக்கச் செய்கின்றார்கள். அந்த பகவானே மனிதர்களுக்கு அவர்களது கர்ம பலன்களை அளிப்பவர். அப்பா! உலகங்களை எல்லாம் படைத்த அந்த பகவான் உனக்கு சுருக்கமாக கூறப்பட்டார். இந்த ஸ்ருஷ்டியில் கார்யமாகவோ, காரணமாகவோ உள்ள அனைத்தும் அந்த ஸ்ரீஹரியைக் காட்டிலும் வேறான ஒன்று அல்ல.

*இதம் பாகவதம் நாம யன்மே பகவதோதிதம்*

*ஸங்க்ரஹோSயம் விபூதீநாம் த்வமேதத் விபுலீகுரு 2.7.51*

அந்த பகவானால், எனக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதம் என்பது இதுதான். இது அவனது விபூதிகளின் சுருக்கம். நீ அதை விரிவாக்குவாயாக. எவ்விதம் வர்ணித்தால் அந்த ஹரியிடம் ஜனங்களுக்கு பக்தி உண்டாகுமோ, அப்படி மனதில் நன்கு

சிந்தித்து வர்ணிப்பாயாக. எப்படி வர்ணித்தால், பகவான் என்று ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையும், அதனால் மன நிம்மதியும் மக்கள் உணர்வார்களோ, அவ்வாறு மனதில் கொண்டு வர்ணிப்பாயாக. இந்த பகவானே அடையத்தக்கவன் என்று மனதில் நன்கு படிந்து, மனிதர்களுக்கு அவன் மீது மேலும் மேலும் பக்தி வளரும் விதமாக நான் கூறிய சுருக்கமான பகவத் விபூதிகளை விரிவாக வர்ணிப்பாயாக. ஈச்வரனுடைய மாயையை வர்ணிப்பவரும், நித்யம் கேட்பவர்களுமான ஜீவன்களுடைய மனது மாயையினால் மோஹத்தை அடைவதில்லை.

(கனியும்)

## சனாதனப்புதிர் பகுதி 71 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. அசோக சக்கரவர்த்தி **(268-233BC)**காஷ்மீரில் சிவனுக்காக ஒரு கோவிலை கட்டினார். ஸ்வாமியின் பெயர் என்ன? இதை பற்றிய குறிப்பு எங்கே காணப்படுகிறது?
2. ஒவ்வொரு ஊரிலும் சிவன் கோயில் கட்டப்பட வேண்டும் என்று கௌடில்யர் கூறி இருக்கிறார். இது எங்கே காணப்படுகிறது?
3. சைவ வழிபாடு இந்தியாவின் தெற்கு பாகத்தில் எப்பொழுது அதிகமாயிற்று?
4. திருமந்திரம் எழுதிய திருமூலர் எங்கே சென்று **28**ஆகம தொகுப்புகளை கொண்டு வந்தார்?
5. மெய்கண்ட தேவர் எழுதிய நூலின் பெயர் என்ன?
6. மெய்கண்ட தேவரின் நூல்களை மேலும் விளக்கி பிரசித்தமாக செய்தவர்கள் யார்?
7. சிதம்பரம் நடராஜாவை பற்றிய விஷயங்கள் எங்கே காணப்படுகின்றன?
8. சிதம்பரத்தின் மற்ற பெயர்கள் என்ன?
9. நடராஜா யாருக்காக ஆனந்த தாண்டவம் தில்லை வனத்தில் புரிந்தார்?
10. சிதம்பரம் கோயிலில் உள்ள **5**மண்டபங்களின் பெயர்கள் என்ன?

<u>அச்சுப்பிழை திருத்தம் சனாதனபுதிர் - **70** - பிப்ரவரி மாத இதழ்</u>

கேள்வி **8.** சாந்தி பர்வா - அத்யாயம் **342** - (மோக்ஷதர்மபர்வா) எந்த நடையில் காணப்படுகிறது?

பதில் **8.** பெரும்பாலும் வசன நடையில் காணப்படுகிறது.

# கோபாலனுக்கு பூலோக ஜீவனின் மடல்

- ஸ்ரீ பத்மபாதர்

பரம கிருபாளுவான நீ எனக்கு மிகவும் அரிதான மனித பிறவியை தந்துள்ளாய். அத்துடன் ஏன் உன் கிருபையை நிறுத்திக் கொண்டாய்? நான், இந்த பிறவியை பயனுள்ளதாக செய்து உன்னை வந்தடைந்து முக்தி அடையும் வரை, உன் கருணையை தொடரலாமே! இதுநாள் வரையில், இந்த மனித பிறவி, பலவிதத்திலும் வீணாகிவிட்டது. இதுநாள் வரையில் என்றால், என்றைக்கோ என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். நேற்று கூட, பலவிதத்திலும் நேரம் வீணானது. புண்ணியம் பல செய்யலாம். ஆனால், அந்த புண்ணியங்கள் எல்லாம் மீண்டும் அதன் பலனை தருவதற்கு, என்னை பிறவி எடுக்க செய்யும். நிறைய ஜபம் செய்யலாம். தியானம் செய்யலாம், தவம் செய்யலாம் என்றால், "நான், எனது" என்ற இரண்டும் அழியாமல், நான் செய்யும் தியானம், தவம், ஜபம், எல்லாம் சித்திகளில் கொண்டு போய்விடுமே தவிர ஞானத்தில் கொண்டு போய்விடாது.

"நான், எனது" இரண்டையுமே அழித்து விடலாமே என்றால், அவை எங்கு ஒளிந்திருக்கிறது என்பது எனக்கு தெரியாதபடி, கண்டு பிடிக்க முடியாத ஒரு மாய உருவத்தை எடுத்து கொண்டு ஒளிந்து கொண்டுள்ளது. கண்டுபிடிக்கவே முடியாது. எப்படியோ அதனுடைய ஆதாரத்தை கண்டுபிடித்து விட்டாலும் கூட, அதை அழிக்கவும் முடியாது. அது பல பல புது கோணங்களில் சிந்தனையை உண்டு பண்ணி, எனக்கு அதில் ஒரு மயக்கத்தை உண்டு பண்ணி, அதன் இருப்பையே மறக்கடித்துவிடும். உலகத்தில் விதம்விதமாக விளையாடுவதற்கு எவ்வளவோ விளையாட்டுக்கள் இருக்கும்பொழுது, இந்த மாயை என்ற விளையாட்டை என்னுடன் நீ விளையாடித்தான் ஆக வேண்டுமா? உனக்கு இந்த விளையாட்டு அலுக்கவே இல்லையா?

நான் உன்னிடம் வேண்டுவது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். உன் மாயை விளையாட்டை, சற்றே என்னிடமாவது நிறுத்தி, "நான், எனது" இரண்டினுடைய ஆதாரத்தை

ஸ்பஷ்டமாக காட்டி கொடுப்பாயாக.

அதோடு நின்றுவிடாமல், "நான், எனது" செய்திடும் மாயாஜாலங்களில் எல்லாம், நான் வீழ்ந்துவிடாமல் உறுதியுடனும் விழிப்புடனும் இருந்து, அவைகளை அழிப்பதற்கான வழிமுறைகளை சொல்லி தருவாயாக. அந்த வழிமுறைகளை செயல்படுத்த வைத்து, அதில், நான் தளராமல் வெற்றியடைய வைத்து, அதை கண்டு, நீ மகிழ்ச்சியடைய வேண்டும். இதை நான் வேறு யாரிடம் கேட்க முடியும்? உன்னிடம் மட்டும்தான் கேட்க முடியும். நீ, என் பொருட்டு அருள் செய்துதான் ஆக வேண்டும்.

இப்படிக்கு

உந்தன் தாஸன்

---

**கோவிலில் நாமா சொல்கையிலோ, பஜனை செய்கையிலோ, கைங்கரியம் செய்கையிலோ அல்லது எந்தவித பகவத் காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும், "நான் செய்தேன், நான் செய்தேன்" என்று சொல்லலாகாது. "நான் எவ்வளவு ஜபம், தியானம் எல்லாம் செய்திருக்கிறேன்", "எவ்வளவு கோவில்களுக்கு கும்பாபிஷேகம் செய்திருக்கிறேன்" "எவ்வளவு பூஜை செய்திருக்கிறேன்" என்றெல்லாம் சொல்வது எதை குறிக்கிறது? அது எல்லாம் தற்புகழ்ச்சிதானே? தற்புகழ்ச்சி எப்படி பகவானின் துதி ஆகும்? அந்த நபர் தன்னைத்தானே புகழ்ந்து துதித்து கொள்கிறார். அவர் பகவானை ஒன்றும் துதிக்கவில்லை என்றாகிவிடுகிறது அல்லவா? இது பகவானுக்கு அர்ச்சனையா, தனக்கு அர்ச்சனையா? பகவானுக்கு பூஜையா, தனக்கு பூஜையா? பகவானுக்கு இப்படிப்பட்டவர்களை பார்த்தால் சிரிப்புதான் வரும்.**

**-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**

# மஹான்களின் வசனம் ..

- ஸ்ரீஸ்வாமிஜி

ஒருவர் என்ன பேசுகிறார், என்ன எழுதுகிறார் என்பதை வைத்துக்கொண்டு, அவரை பற்றி தெரிந்து கொள்ள முடியும். ஹிருதயத்தில் இல்லாதது எப்படி வார்த்தையில் வரும்? இல்லை எனில், ஒருவர் மற்றொருவரை காப்பி அடித்து எழுதியோ பேசியோ வருகிறார் என்று அர்த்தம்.

மஹான்கள் எப்பொழுதும் பேசுகையில், புதிது புதிதாக பகவத் விஷயங்களை சொல்லுவது வழக்கம். அவர்களிடம் சத்சங்கத்தில் பழகுபவர்களுக்கு இது அனுபவமாக இருக்கும். பல விஷயங்களை, பல கோணங்களில், ரசனையாக புதிது புதிதாக சொல்வர். அது அவர்களுக்கு அப்பொழுது சொல்லும்பொழுதுதான் தோன்றியது என்று சொல்லிவிட முடியாது.

சாதாரணமாக, மனது என்பது எப்பொழுதும் எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கும். சாப்பாடு, ஆபீஸ், சினிமா, தூக்கம் என்று எதையாவது நினைத்துக் கொண்டிருக்கும். மனதில் நமக்கு எப்பொழுதாவது பகவானின் சிந்தனை வரும். இது மாறி, எப்பொழுதும் பகவானின் சிந்தனை, இனிமையாக தொடர்ந்து கலையாது இருக்குமானால், அதுவே பக்தி.

மஹான்கள் எப்பொழுதும், பகவானையே தியானம் செய்துகொண்டு, அவனைப் பற்றியே சிந்தித்தவாறு இருப்பர். அப்படி பல **பா**வங்களில் மூழ்கி அவர்கள் இருக்கையில், அவர்களுக்கு, புதிது புதிதாக, பகவானைப் பற்றி தோன்றி கொண்டே இருக்கும். அதைத்தான், அவர்கள் அடுத்தடுத்து பகவத் குணத்தை பற்றி பேசுகையில், பிறர் நன்மைக்காக எடுத்து சொல்கின்றனர்.

அதனால்தான், மஹான்கள் எழுதுவதிலும், புதிது புதிதாக **பா**வங்களும் ரசோக்திகளும், வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதை சுலபத்தில் பார்க்க முடிகிறது.

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

# துயர் வரின் அழைமின் ..

-ஸ்ரீஸ்வாமிஜி

---

கஷ்டம் என்பது சொல்லிக்கொண்டு வராது. ஜோதிடர் சொல்லும் சமயம் சரியாக வரும், மற்ற நேரத்தில் வராது என்றெல்லாம் சொல்ல முடியாது. எப்பொழுது வேண்டுமானாலும் வரும். சொல்லிக்கொண்டு வராமல் திடுமென்று வந்தால்தான், அதற்கு கஷ்டம் என்றே பெயர்.

தர்மபுத்திரர் செய்த ராஜசூய யாகத்தை பார்த்து பொறாமைப்பட்ட துரியோதனன் அவரை, "பெரிய கட்டிடம் ஒன்று கட்டி இருக்கிறேன், கிரஹப்ரவேசத்திற்கு வாருங்கள்" என்று சொல்லி அழைக்கிறான். அவருக்கு சூதாட்டம் ஆட போகிறோம் என தெரியாது. போனபின்தான், சூதாட்டம் ஆடலாமா என துரியோதனன் ஆசை காட்டுகிறான். எதை வைத்து எல்லாம் ஆடலாம் என்றும் சொல்கிறான்.

சதுரங்க விளையாட்டில் காணப்படும் யானை, குதிரை போன்றவை எல்லாம் **Symbolic**ஆன விஷயங்கள். இம்மாதிரி ராஜாக்கள் விளையாடும்போது பணயம் வைத்து சூதாடுவர். அதில் ஒரு யானை அல்லது குதிரை அல்லது போர்வீரனை சாய்த்துவிட்டால், இத்தனை யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பது வென்றவனுக்கு கொடுத்து விட வேண்டும். விளையாட்டு அப்படித்தான் போகும்.

போன இடத்தில், தர்மபுத்ரரிடம் சகுனி ஆசை காட்டி பேசுகிறான்.

"வாழ்க்கையில் பந்தயம் வேண்டும். போட்டி இருந்தால்தானே வித்தை வளரும். பரீக்ஷை புத்தியை பரிமளிக்க செய்யும். அதனால் போட்டி அவசியம்" என்கிறான்.

"சரி. சூதாட்டத்தில் என்ன பெரிதாக பரீக்ஷையும் புத்தி வளருவதும் இருக்கிறது" என்கிறார் தர்மபுத்திரர்.

சகுனியோ, "இருக்கிறது. தெய்வம் யார் பக்கம்

இருக்கிறது என்பது பகடைக்காய் போட்டால், தெரிந்து விடுமல்லவா'' என்கிறான். எப்படியோ பேசி அவரை மயக்கி சூதாட வைக்கிறான்.

அதன் முடிவில், துச்சாதனன் வந்து த்ரௌபதியின் வஸ்திரத்தை பிடித்து இழுக்கிறான். த்ரௌபதிக்கு இப்படி நடக்க போகிறது என்று தெரியாது. கஷ்டம் அப்படித்தான் வரும்.

அப்பொழுது அவளால் தன்னை காப்பாற்றிக் கொள்ள என்ன செய்து கொள்ள முடியும்? ஹோமம் செய்ய அவகாசமிருக்கிறதா? செய்யத்தான் முடியுமா? அல்லது ப்ராணாயாமம், தியானம் என்று ஏதாவது செய்ய முடியுமா? அவளால் அப்பொழுது செய்ய முடியும் என்றால், அது ஒன்று மட்டும்தான். பகவானை துணைக்கு அழைப்பது மட்டும்தான். அதைத்தான் அவள் செய்தாள். பகவானும் அருள் செய்தான்.

இதைத்தான் திருமங்கையாழ்வார், ''துஞ்சும்போது அழைமின், துயர்வரில் நினைமின் துயர் இலீர் சொல்லிலும் நன்றாம் நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா என்னும் நாமம்'' என்றார். கஷ்டம் வருகையில் யாகம், ஹோமம், தியானம் என்று ஏதும் செய்ய முடியாது. பகவானின் நாமம் சொல்லி அலறத்தான் முடியும்.

கஷ்டம் வருகையில், அவன் பெயர் சொல்லி அழைத்தால் காப்பாற்றுவான். சொல்லிக்கொண்டே இருந்தாலோ கஷ்டமே வரப் போவதில்லை. ஏனெனில், நாமமே பகவான்தான். நாமம் ஒருவர் நம்பிக்கையுடன் சொல்கையில், அவருடன் பகவான் இருக்கிறார். அதனால், பிற ப்ரார்த்தனைகளை விட ,நம்பிக்கையுடன் நாமம் நாவில் எப்பொழுதும் இருக்கட்டும் என்று ப்ரார்த்திப்பதுதான், நல்ல ப்ரார்த்தனை. இதில் மீதி ப்ரார்த்தனைகள் அடங்கிவிடும்.

**காலை 7.20 - 7.30AM <u>ஒவ்வொரு சனிக்கிழமையும்</u> *பொதிகை* தொலைக்காட்சியில் "*மதுரகீதம்*" - ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**

# வீடு தேடி வருவான் விட்டலன் - 13

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

## ஸ்ரீ ஞானேஸ்வரர்-2

தீர்த்தயாத்திரைக்கும் க்ஷேத்ரங்களுக்கும் செல்வதில் பெரிய பலன் இருக்கிறது. க்ஷேத்ரங்களில் உள்ள கோவில்களில் உள்ள ஸ்வாமி சான்னித்யத்துடன் இருக்கிறார். நாம் போய் சும்மா நின்றாலும் போதும். அந்த ஸ்வாமியின் அனுக்ரஹம் கிடைத்துவிடும். அதுபோல் தீர்த்தயாத்திரைகளுக்கும் க்ஷேத்ரங்களில் உள்ள பெரிய விழாக்களுக்கும், மஹான்களும் சித்த புருஷர்களும் கூட வருவதுண்டு. அப்படி போவதால், அவர்கள் நம்மை பார்ப்பதற்கும், அவர்களின் கடாக்ஷமும் ஸ்பரிசமும் பெறுவதற்கு வாய்ப்பும் கிட்டும். இப்படி யாத்திரை செல்கையில், கூட்டத்தில் யாரோ ஒருவர் நம்மை தள்ளி 'நில்' என்று சொல்லலாம். யாரோ ஒருவரிடம் நாம் பேசிவிட்டு வரலாம். அவர் ஒரு மஹாத்மாவாக இருக்க கூடும். அவர்களின் ஸ்பரிசம் கிடைக்கிறதே. அதனால் பெருத்த லாபம் உண்டு. மேலும் தீர்த்த யாத்திரையில், நாம் ஸ்வாமியை பார்க்கவில்லை எனினும், அந்த க்ஷேத்ர ஸ்வாமி நம்மை பார்ப்பார். அதனால், அதுவரை செய்த பாபமானது, அந்த க்ஷணத்தில் போய்விடும். இப்படி பெரிய பலன் க்ஷேத்ர யாத்திரையில் இருக்கிறது.

விட்டல்பந்த்தும், இப்படி சாதுக்களின் தரிசனத்திற்காகத் தான் கிளம்பி வந்தார். வந்து ஆலந்தியில் தங்கினார். இந்த விட்டல்பந்த்திற்கு பின்னாளில் பிறந்த ஞானேஸ்வரர் வாழ்வில் இங்கு ஒரு அதிசய சம்பவம் நிகழ்ந்தது. மனிதர்களும், பிராணிகளும் நடப்பது போல், ஞானேஸ்வரர் ஒரு குட்டி சுவரையே இங்கு நடக்க வைத்துவிட்டார். அந்த சுவர் இன்றும் அங்கு இருக்கிறது. அதன் அருகே, ஒரு சிவன் கோவில் இருக்கிறது. அதில்தான் இந்த விட்டல்பந்த் தங்கினார். தங்கி இரவில் ஜபமும், தியானமும் செய்து வந்தார்.

மனது அடங்கியவர்களின் முகத்தை பார்த்தால், அதில் ஒரு அமைதி நிலவுவதை பார்க்கலாம். தெய்வத்தை உபாசனை

செய்பவர்களின் முகத்தை பார்த்தாலோ, அதில் ஒரு தேஜஸை, ஒளியை பார்க்கலாம். இந்த விட்டல்பந்த்தின் முகத்திலோ தேஜசும், அமைதியும் நிறைந்து ஒளி வீசியது.

ஆலந்தியிலேயே சீதோபந்த் என்பவர் இருந்தார். தமிழ்நாட்டில் கிராமத்தையே நிர்வாகம் செய்பவர்களுக்கு பழங்காலத்தில் குலபதி என்று பெயர். மஹாராஷ்டிரத்தில் இப்படிப்பட்டவர்களை குல்கர்னி என்பர். சீதோபந்தும் ஒரு குல்கர்னி. அவர் ஊரில், மிக மரியாதையுடனும் வசதியுடனும் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியின் பெயர் உமாபாய். இவர்களுக்கு ஒரு பெண் ருக்மணி என்பவள் இருந்தாள்.

சீதோபந்த் ஒருமுறை கோவிலில் விட்டல்பந்த்தை பார்த்தார். அந்த ஒளி வீசும் முகத்தை கண்டவுடன், "ஆஹா எப்படிப்பட்ட நல்ல சத்புருஷனாக இவன் இருக்கிறான். இவனுக்கு நம் பெண்ணை திருமணம் செய்து கொடுக்கலாமே" என்று ஆசைப்பட்டார். ஆனால் நேரில் விட்டல்பந்த்தை கேட்க தயங்கினார். மேலும் பெற்றோர்களிடம் தானே சம்பந்தம் பேச வேண்டும். பையனிடம் எப்படி பேசுவது? இப்படி இவர் நினைத்துக்கொண்டிருக்கையிலேயே, விட்டல்பந்த் ஆலந்தியில் இருந்து கிளம்பி பண்டரீபுரம் பாண்டுரங்கனை சேவிக்க வந்துவிட்டார். பாண்டுரங்கனை சேவித்துவிட்டு, சந்திரபாகா நதிக்கரையில் படுத்து இருந்தார்.

கோவிலில் இருந்த ருக்மணி பாண்டுரங்கனிடம் "நம்மையே பல க்ஷேத்ரங்களில் தேடி தேடி சேவித்து அலைந்து வரும் விட்டல்பந்த்தை பாருங்கள். அவனுடைய க்ஷேமத்திற்காக அவனுக்கு ஒரு திருமணம் செய்து வையுங்கள்" என்றாள். பாண்டுரங்கன் அதை ஆமோதித்தான். உறங்கிக் கொண்டிருந்த விட்டல்பந்த்தின் கனவில் சென்றான் பாண்டுரங்கன். "விட்டல்பந்த்! உனக்கு திருமணம் செய்யலாம் என்று இருக்கிறேன். நாளை ஆலந்தியிலிருந்து சீதோபந்த் என்பவர் தன் பெண் ருக்மணியுடன் வருவார். திருமணம் செய்துகொள்" என்றான். கனவிலேயே கூட, இது விட்டல்பந்த்துக்கு தூக்கிவாரி போட்டது. அவர் பாண்டுரங்கனையே கேள்வி கேட்டார் "நான் காமத்தை ஜெயித்தவன். எனக்கு எதற்கு திருமணம்" என்றார்.

(தொடரும்)

## பாலகர்களுக்கு ஒரு கதை



# மாதவனின் கவனம்!

ராமனின் அழகு கண்கள் அந்த புத்தகத்தை பார்த்தவுடன் விரிந்தன. அது அவனது அண்ணன் மாதவன் கொடுத்தது. அதில் அழகழகான வண்ண படங்கள் இருந்தன. இயற்கைக்காட்சிகளும் அழகான மலைப்ரதேசங்களும் எழில் கொஞ்சும் வனப்ரதேசங்களும், நீர்வீழ்ச்சிகளும், கடற்கரைகளும், சோலைகளும் மிக அழகாய் வரையப்பட்டு இருந்தன. அந்த ஓவியனுக்கு அபார கற்பனையும் ஓவியத்திறமையும் இருக்க வேண்டும். பார்த்தவுடனேயே மனதை அவை கவர்ந்து இழுத்தன. ஒவ்வொரு படமும் அதில் காணப்பட்ட இயற்கையுடன் ஒன்றிய வர்ணஜாலங்களும் மெய்மறக்க வைக்கும்படி இருந்தது.

ராமனின் மலர்ந்த பளிங்கு போன்ற கண்கள் அவற்றிலிருந்து அகலவே இல்லை. ஒவ்வொரு பக்கமாக நகர்த்தி கொண்டிருந்தான். "மாதவா! எப்பொழுது இதை எல்லாம் வரைந்தாய்?" என்றான். உடனே மாதவன் "ராமா! இது சங்கரனுடையது. பத்திரமாக பார்த்து விட்டு கொடு" என்றான். சரி சரி என்று தனது பள்ளி பேருந்தை நோக்கி ஓடினான் ராமன்.

மாலை வீட்டிற்கு வந்தவுடன், ராமனே மாதவனிடம் சென்று, "அண்ணா, ஒன்று சொன்னால் கோபித்து கொள்ள மாட்டாயே" என்று கேட்டான். "சொல்" என்றான் அண்ணன் மாதவன். "பேருந்தில் வருகையில் பக்கத்து இருக்கையில் நீ கொடுத்த புத்தகத்தை வைத்து விட்டேன். என்னை மன்னித்து விடு. பள்ளி பேருந்து என்பதால், நாளை எப்படியும் ஓட்டுனரிடம் கேட்டு வாங்கி விடுகிறேன். பத்திரமாகத்தான் இருக்கும்" என்றான்.

அதை கேட்ட மாதவனுக்கு கோபம் பொத்து கொண்டு வந்தது. செய்ததையும் செய்து விட்டு, அதை நீயே சொல்லவும் சொல்கிறாயா என்று முதுகில் ஓங்கி அடித்தான். ராமன் குலுங்கி குலுங்கி அழுதான். மறக்காமல் வாங்கி தருகிறேன் அண்ணா

என்றவாறு போய் விட்டான். மாதவன் கோபம் அடங்கவில்லை. குறை சொல்லியவாறு இருந்தான். மறுநாள்காலை, மாதவனின் பள்ளிக்கு அவனது சித்தப்பா வந்திருந்தார். அவனை சந்தித்து, ஒரு கவரை கொடுத்து "மாதவா, ஊருக்கு சென்றிருக்கும் உன் தந்தை இருநாட்களில் வர உள்ளார். இந்த கவரை அவரிடம் பத்திரமாக சேர்ப்பித்து விடு. நான் வருகிறேன்" என்று சொல்லி கிளம்பினார். சரி என்று வாங்கி வைத்து கொண்டான் மாதவன்.

இருதினங்கள் கழித்து, மாதவனின் தந்தை ஊரிலிருந்து வந்தார். ராமனும் மாதவனும் தந்தையை பார்த்து பேசிக்கொண்டிருந்தனர். அன்னை தேநீர் கொண்டு வந்தாள். அதை பருகி கொண்டே தந்தை, "மாதவா, சித்தப்பா உன்னிடம் ஒரு முக்கியமான கவர் கொடுத்திருப்பாரே! அன்னையிடம் கொடுத்து வைத்திருக்கிறாயா அல்லது உன்னிடமே இருக்கிறதா? முக்கியமானது அது. எடு" என்றார். அதை கேட்டவுடன் மாதவனுக்கு சுரீர் என்றது. அதை அவன் மறந்தே விட்டான். தன் பையில் தேடி பார்த்தான்; இல்லை அது. அன்னையிடம் அவன் கொடுக்கவும் இல்லை. பயமும் கவலையும் அவனை தொற்றி கொண்டது. அவன், அதை, அஜாக்ரதையாக இருந்து, தொலைத்து இருக்கிறான். இருநாட்களில் அதை பற்றி அவனுக்கு நினைவும் இல்லை.

தயங்கி தயங்கி அப்பாவிடம் வந்து, "தொலைத்து விட்டேன் அப்பா. மன்னித்து விடுங்கள்" என்றான். அப்பா தன்னை அடிக்க போகிறார் என்று நினைத்த அவனை பார்த்து அவர், "முக்கியமானது என்று தெரிந்தும் இப்படி கவன குறைவாக இருக்கலாமா மாதவா? சரி சரி. அது நகல்தான். இனி இம்மாதிரி செய்யாதே. கவன குறைவு தப்பு" என்றார். தந்தை அவனை அணைத்துக்கொண்டு, கண்டிப்புடன் சொன்னார். மாதவனுக்கு அவர் சொன்னது, ஆழமாக பதிந்தது. உடனே அவனுக்கு ராமனை அடித்தது ஞாபகத்துக்கு வந்தது. அவன் கண்கள் பனித்தன. அவன் ராமனின் அருகே சென்று, அவனை கட்டிக்கொண்டு, "ராமா என்னை மன்னித்து விடு. உன்னை மிகவும் கோபமாக பேசி அடித்து விட்டேன்" என்றான். ராமனின் கண்களும் பாசத்தால் நனைந்தன.

**பிப்ரவரி 8 2015** - சோளிங்கர் பெண்கள் அரசினர் மேனிலைப்பள்ளியில், ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் **மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை** நடைபெற்றது. 800க்கும் மேற்பட்ட அன்பர்கள் திரளாக வந்திருந்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர். முன்னதாக ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் கோவிலில் ஆதிகேசவ பெருமாளை தரிசனம் செய்து விட்டு, அங்கு நாமகீர்த்தனமும் செய்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அங்கிருந்து அரசினர் மேல்நிலைப்பள்ளி வரை, அன்பர்களுடன் மஹாமந்திர கீர்த்தனத்துடன் வீதி பஜனை செய்தார்கள்.

**பிப்ரவரி 11** - திருவண்ணாமலை ஸ்ரீ யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரம வளாக "மாதேவகி பாடசாலை"யில், ரிக் மற்றும் சுக்ல யஜுர் வேத பாடசாலைக்கான புதிய கட்டிடத்தை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் திறந்து வைத்து அருளுரை வழங்கினார்கள்.

**பிப்ரவரி 14** - திருத்தணி பலிஜாவாடி கல்யாணமண்டபத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஐநூறு அன்பர்கள் பங்கேற்க, சத்சங்கமும் மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனையும் நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 17** - சிவராத்திரியை முன்னிட்டு விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கனுக்கு, ஸ்ரீஸ்வாமிஜி விசேஷ திருமஞ்சனம் செய்து, அங்கு நாம மஹிமை குறித்து பிரவசனமும் செய்தருளினார்கள். அன்று மாலை மதுரபுரி ஆஸ்ரமத்தில் கன்யாகுமரி ஸ்ரீஜயஹனுமானின் ப்ரதிஷ்டா தினத்தை ஒட்டி, ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் விசேஷ திருமஞ்சனமும் வடைமாலையுடன் சிறப்பு பூஜையும் நடைபெற்றது. இரவு வேத பாராயணத்துடன் ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி பூஜை செய்தருளினார்கள். தமது திருக்கரங்களால் அபிஷேக தீர்த்த ப்ரசாதமும் வழங்கி அருளினார்கள்.

**பிப்ரவரி 20-26, 2015** - சென்னை நாரத கானசபாவில் ஜனவரி மாதத்தில் நிகழ்த்தியது போலவே பெங்களூரு சுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாக ஸ்ரீசீதாராம ஹாலில், சைதன்ய

சரித்திரம் உபன்யாசம் ஸ்ரீஸ்வாமிஜி வழங்கினார்கள். பெருந்திரளான அன்பர்கள் வந்து சிரவணம் செய்து மகிழ்ந்து ஆனந்தித்தனர். 21ஆம் தேதி பெங்களூரிலுள்ள ஒடுக்கத்தூர் ஸ்வாமிகள் மடத்தில் அருளுரையும் வழங்கினார்கள்.

முன்னதாக பெங்களூர் செல்லும் வழியில் ஆம்பூருக்கு அருகே உள்ள ஊட்டல் கிராம மக்களிடையே, ஒரு சத்சங்கம் நிகழ்த்தி மஹாமந்திர கீர்த்தனமும் ஸ்ரீஸ்வாமிஜி செய்தார்கள்.

ஜனவரி 29ஆம் தேதியன்று, பெங்களூரு சுந்தர ஆஞ்சநேயர் கோவிலுக்கு விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது மல்லேஸ்வரம் ஆஸ்திக பஜனை மடத்திற்கு சென்று சத்சங்கம் நிகழ்த்தினார்கள். அங்கு ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன் பூர்ணிமாஜியின் சத்சங்கமும் ஏழு நாட்கள் இடம் பெற்றிருந்தது.

**ஜனவரி 2015** - மார்கழி மாதத்தில் ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் ஆலயத்தில், மார்கழி வீதி பஜனை மற்றும் திருப்பாவை வகுப்புகளில் கலந்து கொண்ட மஹாரண்யம் மற்றும் மலைப்பட்டு கிராமத்தை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட சிறார்களுக்கு பொங்கல் திருநாளன்று, பள்ளி சீருடை கன்யாகுமரி ஸ்ரீஜயஹனுமான் சன்னதியில் வழங்கப்பட்டது.

**பிப்ரவரி 15** ஏகாதசி அன்று மதுரபுரி ஆஸ்ரமத்தை சுற்றி உள்ள கிராமங்களை சேர்ந்த பள்ளிகளிலிருந்து தேர்வை எதிர்கொள்ள இருக்கும் முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவ மணிகளுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை, மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் நடைபெற்றது. இதில் திரு.பம்மல் பாலாஜி மற்றும் முரளிஜி மாணவர்களை ஊக்குவித்து பேசினார்கள்.

**விருதுநகர் மற்றும் தூத்துக்குடி** - பிப்ரவரி 2லிருந்து 10தேதி வரை தூத்துக்குடியில் ராமாயண உபன்யாசமும் விருதுநகரில் பிப்ரவரி 16லிருந்து 23வரை பாகவத உபன்யாசமும் முரளிஜி நிகழ்த்தினார். வீதி பஜனையும் இடம் பெற்றிருந்தது. சுமார் ஐநூறு அன்பர்கள் பங்கேற்றிருந்து, சிரவணம் செய்து திருவருளும் குருவருளும் பெற்று சென்றனர்.




**LATEST NEW RELEASES FROM**
**CHAITANYA MAHAPRABHU NAMA BHIKSHA KENDRA**
CONTACT - MADHURAM DIVINE STORES - 23727400 / 9442613710

## சனாதனப்புதிர் பகுதி 71 - விடைகள் -ஆத்ரேயன்

1. கல்ஹானருடைய ராஜதரங்கிணி - ஸ்வாமியின் பெயர் அசோகேஸ்வரர்.
2. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்.
3. பல்லவர்கள் **325 - 897AD;** சாளுக்கியர்கள் **543 - 745AD;** சோழ அரசர்கள் **846 -1173AD.**
4. காஷ்மீர் சென்று ப்ரத்யபிக்ஞான வழிபாட்டு முறையில் தேர்ச்சி பெற்று **28**ஆகமத் தொகுப்புகளை கொண்டு வந்தார்.
5. சிவஞான போதம் - ரௌரவாகமத்தில் உள்ள **12**சூத்திரங்களுக்கான உரை.
6. அருள்நந்தி சிவாச்சாரியார் **1253 AD;** சிவ ஞான சித்தி என்ற நூல்; உமாபதி சிவாச்சாரியார் **1313AD;** தசகார்யம் என்ற நூல்.
7. உமாபதி சிவாச்சாரியார் எழுதிய கோயில் புராணம் என்ற நூல் **1290 - 1340AD.**
8. தில்லை வனம்; தாருகா வனம்.
9. பதஞ்சலி, வ்யாக்ரபாத முனிவர்களுக்காக.
10. ராஜா சபை; நிருத்ய சபை; தேவசபை; கனக சபை; சித்சபை.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## பக்தராஜ் ஸ்ரீமானஸிம்ஹஜி-3

மானஸிம்ஹை பார்த்து அவர் வீட்டில் உள்ளவர்கள் அவருக்கு பல விதமாக போதனை செய்து, தங்களுடன் வீடு திரும்பிவிடும்படி வேண்டினார்கள். ஆனால் அவருடன் பேசுவது சுவற்றுடன் பேசுவதற்கு சமமாக தோன்றியது. குடும்பத்தினரது வார்த்தை ஒன்றை கூட, அவர் கேட்கவில்லை. மனமுடைந்தவர்களாய் அவர்கள் வீடு திரும்பினார்கள்.

இப்பொழுது, பண்டித பாபாவுடன் தாவுஜி தோட்டத்தில் மானஸிம்ஹ் தங்கி 8 மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு நாள் பாபாவிடம் தனக்கு தீக்ஷையளிக்கும்படி ப்ரார்த்தித்தார். பண்டித பாபா, யாருக்கும் தீக்ஷை அளிப்பதில்லை என்ற நியமத்தோடு இருந்தார். அதனால், அவரை பூச்ரியின் மாதவதாஸ் பாபாவிடமிருந்து, தீக்ஷை பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். மானஸிம்ஹ் அப்படியே செய்தார். ஆனால், கடைசிவரையில் அவர் உடலாலும் மனதாலும், பண்டித பாபாவையே தனது வாஸ்தவமான குருவாக எண்ணினார். அவரை பின்பற்றியே பஜனையும் செய்தார். பண்டித பாபாவும் இவரை ஒரு ப்ரிய சிஷ்யரை போன்றே நடத்துவார். அவரிடம் மிகுந்த ப்ரேமையை பொழிவார். தனது சரணத்தை யாரையும் ஸ்பரிசிக்கக் கூட அனுமதியாத பாபா, மானஸிம்ஹை தனக்கு பாதஸேவை செய்ய சொல்லுவாராம். இவ்விதம், தனக்கு ஸேவை செய்ய வேறு யாரையுமே பாபா அனுமதித்ததேயில்லை.

தீக்ஷை பெற்றபின், ஸந்யாஸமும் மானஸிம்ஹ்ஜி மாதவதாஸிடமிருந்தே பெற்றிருக்கலாம். இது பற்றியோ அல்லது அவர் தீக்ஷா நாமம் என்ன என்பது குறித்தோ, யாருக்கும் எந்த நிச்சயமான தகவலுமில்லை. எல்லோரும் அவரை "பக்தஜி" என்றே அழைத்தனர். ஒரு ஸந்யாஸியை போல், அவர் மற்றவர்கள் தூக்கியெறிந்த கிழிந்த ஆடைகளை உடுத்திக் கொள்வார். மதுகரி மூலம் கிடைப்பதையே உண்பார். தண்ணீர் அருந்துவதற்கு மட்டும், ஒரு பழைய டின் டப்பாவை வைத்திருந்தார். வ்ரஜத்தில் வஸிக்கும் ஸாதுக்கள் வ்ரஜத்தின்

மண்ணாலான ஒரு கிண்டியை வைத்திருப்பார்கள். ஆனால் இவரோ, அதையும் விரும்பவில்லை. ஏனெனில், அது மீண்டும் மீண்டும் உடையும்பொழுதெல்லாம் மற்றவர்களை எதிர்பார்க்க வேண்டியிருந்தது.

பண்டித பாபா யாருக்கும் ஸந்யாஸம் அளிக்கமாட்டார். ஸந்யாஸமளிப்பது இருக்கட்டும், ஒருவர் ஸந்யாஸம் பெற அனுமதியை கூட அவர் எளிதில் அளித்துவிடமாட்டார். அவர், "எப்படியோ எனக்கு ஸந்யாஸம் கிடைத்துவிட்டது. ஆனால் தற்போதுள்ள காலத்தில், ஸந்யாஸத்தின் மரியாதையை காப்பாற்றுவது என்பது மிகவும் கடினமானது" என்று கூறுவார். குசல்ஸிம்ஹ்ஜி ஒருமுறை பாபாவிடம் ஸந்யாஸம் பெறுவதற்காக அனுமதி கோரினார். ஆனால், பண்டித பாபா மறுத்துவிட்டார். அதனால் கடைசி வரையில் அவர் க்ருஹஸ்தாஸ்ரமத்திலேயே இருந்து கொண்டு பஜனை செய்து வந்தார். ஆனால் மானஸிம்ஹ்ஜி பாபாவிடம் ஸந்யாஸம் பெற அனுமதி கேட்டபோது, அவர் மகிழ்ச்சியுடன் அனுமதியளித்துவிட்டார். முன்ஜன்மத்தில் மானஸிம்ஹ் ஒரு யோகப்ரஷ்டர் என்றும், சில நாட்களிலேயே, அவர் தனது பஜனையை பூர்த்தி செய்து கொண்டு கிளம்பிவிடுவார் என்றும் பாபா அறிந்திருந்தார்.

அவருடைய பெற்றோர், வேலையாட்கள் மற்றும் லோர்டியை சேர்ந்த மற்ற ஜனங்கள் என்று, அவரை பார்க்க அவ்வப்பொழுது வந்து போய் கொண்டிருந்தார்கள். அவர் வாழ்க்கை முறையையும் உடைகளையும் பார்த்து, அவர்களது இதயம் வெடித்துவிடும் போல் இருந்தது.

பண்டித ராமக்ருஷ்ணதாஸ் பாபாவின் ஸமாதியிருக்கும் "பாகவத நிவாஸ்" எனுமிடத்தில் மானஸிம்ஹஜி ஸந்யாஸத்திற்கு முன், ராஜவேஷத்தில் இருக்கும் ஒரு புகைப்படத்தை க்ருபாஸிந்துதாஸ் பாபா மாட்டி வைத்திருந்தார். இன்றும் அந்த புகைப்படம் அங்கு உள்ளது. ஒருவர் க்ருபாஸிந்துதாஸ் பாபாவிடம், “பாபா! தாங்கள் மானஸிம்ஹ்ஜியுடைய ராஜவேஷத்தில் இருக்கும் இந்த புகைப்படத்தை ஆஸ்ரமத்தில் ஏன் மாட்டி வைத்துள்ளீர்கள்? இந்த இடத்தில் அவரது த்யாகத்தை குறிக்கும் வண்ணம் அவர் ஸந்யாஸம் பெற்றபின் உள்ள புகைப்படமன்றோ இருக்க வேண்டும்?” என்று கேட்டார்.

(தொடரும்)

## FORM IV

Statement about ownership and other particulars about newspaper MADHURAMURALI

(to be published in the first issue every year after the last day of February)

1. Place of publication: - 2/24, Nethaji Nagar, Jafferkhanpet, chennai 600083. Tamilnadu
2. Periodicity of its publication: - monthly
3. Printer's Name : - M/s. Rajthilak Printers (P) Ltd., Sivakasi. Nationality : Indian
4. Publisher's Name : - S.Srinivasan Nationality : Indian
5. Editor's Name : - S.Sridhar Nationality : Indian

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital :**Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83**

I, S.Srinivasan, Publisher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date:01/03/2015 sd/- S.Srinivasan

Signature of Publisher


# Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**

**Consultant in Endocrinology and Diabetes**

**Regn. No 62256**

# ENDOCRINE & SPECIALITY CLINIC

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**

**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**

**(Next to Krishnamachari Yogamandiram)**

**Tel: 2495 0090Mob: 94458 80090**

**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**

**www.chennaiendocrine.com**

# *மாலே மணிவண்ணா - 137*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஒருசார், அணிமலர் வேங்கை மராஅ மகிழம்
பிணி நெகிழ் பிண்டி நிவந்து சேர்பு ஓங்கி
மணி நிறம் கொண்ட மலை

**பெருமானே! நீ எழுந்தருளி இருக்கும் இடத்தில், ஒரு பக்கத்தில் மணி நிறம் கொண்ட மலை உள்ளது. அம்மலையில் அழகிய மலரை உடைய வேங்கை மரம், மரா என பெறும் வெண்கடம்ப மரம், வாசனை மிகுந்த மகிழ மரம், மலர்களின் கட்டு நெகிழ்ந்து மலர்கின்ற அசோக மரம் ஆகிய மரங்கள் உயர்ந்து சேர்ந்து நெருங்கி வளர்ந்துள்ளன என்று அங்குள்ள மரச்செறிவையும், செழிப்பையும் எடுத்து சொன்னார். குறிஞ்சி நிலமாகிய மலை நிலத்து வளரும் மரங்கள் ஆதலின், அப்பெருமானது மலைவளம் கூறியதாகவும் ஆயிற்று.**

ஒரு சார், தண்ணறுந் தாமரைப் பூவின் இடை இடை
வண்ண வரி இதழ்ப் போதின்வாய் வண்டார்ப்ப
விண்வீற்றிருக்கும் கயமீன் விரிதகையின்
கண் வீற்றிருக்கும் கயம்

**மற்றொரு பக்கத்தில் ஆகாயத்தில் பெருமிதமாக அழகு பொலிய விளங்கும் நக்ஷத்திரங்கள் விரிந்து காண்கின்ற அழகை போல, பலமீன்கள் நிறைந்து பரந்துள்ள அழகிய ஓடை உள்ளது. அந்த நீரோடையில் குளிர்ந்த மணம் வீசுகின்ற தாமரைப்பூவின் இடை இடையே உள்ள மலர்களின் வாயில், தேனுண்ண, வந்து வண்டுகள் ஆரவாரிக்கின்றன.**

**நிலவளமும் நீர்வளமும் கூறி மலர்வளத்தை எடுத்துக் காட்டி தொடர்ந்து, வயல்வளத்தைச் சொல்ல வருகிறார். நீரோடையில் மீன்கள் பரந்துள்ளன என்பதை நேரே கூறாமல், "கண் வீற்றிருக்கும்" என்று கூறியுள்ளார். மீன்களை கண்ணுக்கு உவமையாக கூறுவர். ஆதலின் மீன் வீற்றிருக்கும் கயத்தை "கண் வீற்றிருக்கும் கயம்" என்றார். எனவே, அங்கு மீனை கொள்வார் இல்லையாதலின், அறமும் அமைதியும் தவழும் இடம் என்றாராம்.**


**இயற்கை வளத்தினை மரச்செறிவினை காட்டி, மக்களது பண்பாட்டு வளத்தை அங்குள்ள ஓடைகளின் மூலம், அவ்வோடைகளில் செருக்கித்திரியும் மீன்களின் மூலம், நமக்கு காட்டினார் எனலும் ஆம்.**

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே **(புறநா 187) என்ற புறநாநூறு இங்கு உணரத்தக்கது. எந்த இடத்தில் மக்கள் நல்லவர்களாக இருக்கின்றார்களோ, அந்த இடத்தில் நிலமும் நல்லதாக இருக்கின்றது என்ற புறப்பாடலின்படி,**

**மக்கள் கொல்லாமையும், புலால் உண்ணாமையும் உடைய சாத்துவிகர்களாக இருக்கும் இடங்களிலே, வண்டுகள் தேன் உண்ண திரியும், தாமரை பூத்த ஓடைகளையும் கண்ணைப் போல திரியும் மீன்களை உடைய ஓடைகளையும் கொண்டு நிலமும் அழகாக இருக்கும் அல்லவா? இவ்வாறு மரச்செறிவுள்ள மலைநிலத்திலிருந்து, தாமரை பூத்த தடாகங்கள் உள்ள நிலத்துக்கு வந்தவர், வயல்வெளிகள் நிரம்பிய மருத நிலத்துக்கு தொடர்ந்து வருகிறார்.**

**(தொடரும்)**



"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி**: Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | மார்ச் 1, 16, 31 ஏப்ரல் 15 |
| மார்ச் 1 | சென்னை நாரத கான சபா - ஸ்டார் விஜய் டி.வி. பக்தி திருவிழா துவக்கம் - மாலை 5 மணி |
| மார்ச் 5 | சைதன்யர் ஜெயந்தி |
| மார்ச் 6-8 | தூத்துக்குடி |
| மார்ச் 9-11 | சிவகாசி |
| மார்ச் 12-14 | விருதுநகர் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**